# SUPPLEMENT TO THE BRAHMAVIDYA

# ப்ரம்மவித்தியா பத்திரிகையின்

## அநுபந்தம்

புத்மக]சிதம்பரம் ஏவிளம்பிஸுபுரட்டாசிமீ உசூவுக்கு1897ஸுஅக்டோபர்மீ 10உ [இல ம


### வைதீகசந்திரமௌலி.

### மகா:பாசுபதாஸ்திரபராவர்த்தனப்பிரயோகம்.

முன்தொடர்ச்சி.

---

ஸ்ரீமத்அப்பயதீக்ஷிதர் பெருமான் சிவதத்துவவிவேகத்தில் உதகரித்த ஶ்ருதிஹ்ருஷ்ஶ்ருதிவெ்ராக்ஷ வ்ராய ஸ்ரீதைஹயம்மத:| க்ரூணஶ்ருதிவிஷ்யம் நே ஷ்ஹ்ஸம்த்ராஶ்ருயெக|| 'சுருதிப்பிரஷ்டனுயுள்ளவர் வேதோக்த பிராயச்சித்தத்தில் பயமடைந்துள்ளார், காலக்கிரமத்தில் வேதமார்க்கத்தை யடையவேண்டித் தந்திரமார்க்கத்தை யடைவான்' என்பதாதி வாக்கியங்களால் இவரும் வரும்ஜன்மத்தில் வைதிகராணுலு மாகலாமன்றோ? ஒருசமயம் ஸ்ரீ காசியில் முக்தியடைய பாக்கியமிருப்பின், அதுவும் மேலேயாம். ஸ்ரீ சிதம்பரதரிசனமும் ஸ்ரீ காசிமரணமும் முக்தி ஏதுவாதலால் என்க. ஆசுவே இவர் இவ்வளவு தூரம்சொன்னது வாஸ்தவ சிவநேசத்தாலாயின் அதை ஸ்ரீ சிவாம்சாவதார லோககுருனுதன் ஏற்று இவரறியாமையைவிலக்கி அத்துவித ஞானமளிப்பார். விதண்டாவாதமாயின் அதன்பயனை யவரே ஸ்ரீ பைரவமூர்த்தியாகவே யளிக்கவேண்டும். எக்கன்மத்துக்கும் பலதாதா ஈசனேயாதலால் என்க. உண்மைதெளியாது இந்திரரூபனுகவந்த ஈசனை அதர்வாஸ்திரத்தால் சங்கரிக்கமுயன்ற ஸ்ரீமதுபமன்யுவிடம் அன்று அம்புலிசூடிப் பிரான்கருணை செய்யவில்லையா? உண்மையறியாது தமது திருமுடியில் வில்லெடுத்தடித்த விஜயனிடம் அருட்சுரக்கவில்லையா? அப்படி வடமொழிவல்லார் பலருடன்கலந்து ஸ்ரீமதுபநிடத பாஷ்யார்த்த சர்ச்சைசெய்யாக்குறைவாலும், சத்சம்பிரதாய சதாசாரியர் சரணஸேவபாக்கியம் கிட்டாமையானும், ஸ்ரீ லோககுருஸ்வாமிகளிடம் அத்துவித சித்தாந்தத்தமைந்த பண்டைவினைப்பயனுன கொடிய வெறுப்பானும் அவர் அங்ஙனம் எழுதியது குற்றமெனக் கொள்ளற்பாற்றன்று. ஸ்ரீமதாசாரியர்கள் எழுதியபொருள் வேதபுராணேதிகாச சம்மதமாதலாற்றுன் ஸ்ரீமத் வித்தியாரண்யமுனிவரும் தமது வேதபாஷியத்தில் இங்குள்ள 'பூதி' என்ற சொல்லுக்கு ஐசுவரியம் எனப்பொருள்படுத்தி அது அதன்காரணத்தின்மேல் ஆகுபெயராயது என்றுர்.

ஹூதி:=வெணஸ்வயபும், தயா= தக்தாரணஸவமுக்ஷ்ரெத| என்பது அவர்வாக்கியம். மேலும் அப்பூதிவைதிகம் லௌகிகமென இருவகைப்படும் எனவும் குறித்தனர். இதனுல் வைதிக லௌகிக கன்மசாமான்ய சாத்குண்யம் திருநீறென்றும் ஐசுவரியகாரணத்தாற் கூடும் என்பதும் அவர்கருத்தாயிற்று. இதேகருத்து அனேக ஸ்மார்த்தவியாக்யாதாக்கள் கொண்டது. இதுவும் ஸ்ரீபோதாயனமுனிவர்சொன்னதும் ஒருகருத்துள்ளதென்பதை ஆசாரியர் கலிகண்டகோத்தார வியாக்கியானத்தில் குருசரணபூஷணத்தில் காண்க. ஸ்ரீமதாசாரியராதிகள் சொன்னவழியில் எல்லாப்பிரமாணங்களும் ஒத்துப்போகின்றன. ஸ்ரீஜாபாலவிவரணம் மாபாரதம் சிவபுராணம் அனேக அபியுக்தருக்திகளும் ஒத்தன. அங்ஙனமின்றிக் கோசபலத்தாலும் ஸ்ரீமத் போதாயன மகரிஷிவாக்யத்தின் மேற்பொருள்வலியாலும் சிவபுராணபலத்தாலும் 'திருநீறு' என்ற ரூடிப்பொருளைக் கொள்ளினும் குற்றமில்லை. அவ்விருவழியு மில்லாது மந்திர சம்ஸ்காரதீக்ஷாபரமாகச் சொல்வது என்றும் கூடாது. அதற்கு வேண்டியபடி கேவலவேதமந்திரங்களால் (ஆகமசம்பந்தமின்றி) திருநீறுதரித்தலே தாரகம் என்று முன்னரே ஸப்பிரமாணமாக நிரூபித்தமையால் என்றறிக. ஆகையால் இவர்கைப்பற்றிய பூதிவாதம் இவருக்கே பராபூதிவாதமாயது காண்க. ஆதலாலன்றோ ஸ்ரீநீலகண்டதீக்ஷிதமூர்த்திகளும்,

* * * * * * * * * * * * * * *

நிதெ்யஹுஸுஹிஶெவ ஹஷயதி யஸாம்ஹம்ஜஸ ஹநம்ஹஉ 'எவர்தனது திவ்ய மங்களத்திருமேனியை நித்தியமான திருநீற்ருல் பூஷணம்செய்விக்கின்றுர்' என்று பஸ்மத்தைப் பரமபாவனம் மங்களம் எனக்குறித்தார். மேல் 'பூதியும் மங்களந்தானே, அதனுற்பூதி' என்னும் பதத்திற்கு அவ்வாறு பொருள்கோடல் சாலுமென்பரேல் "உலகத்தில் அமங்களமில்லாப்பொருள் எல்லாம் மங்களமாதலினுல் அவற்றை எல்லாம் தனித்தாண்டு புகுத்திப் பொருள்படுத்தவேண்டிவருமன்றோ' என்று கர்ஜித்தார். அந்தோ! வெகு நேர்த்திவாக்கியார்த்தம்! வெகு அழகு பாருங்கள்! சிவபுராணம் வாயுசங்கிதை பூர்வபாகம் காமாஷ்டயோகத்தில்:—

ஶிவஶிஹுநூ கெ ஷ்ரா ணாஜஸாமெஷ ஶிவஸ ூ கஃ।
'மனிதனுக்கு மங்களத்தை என்றும் இச்சிப்பதால் சிவனெனப்படுவோன்' என்றிருப்பதைக் கண்டவொருவன் ஓரிடம் சிவன் என்றசொல்லுக்கு மங்களகான் என்ற பொருளுரைத்தால் அவனைக்கண்டு இங்ஙனமே இவர் பரிகசிப்பார்போலும்! ஸ்ரீகண்டமுனிவர் சப்தத்தால் ஈசனுக்கு அநந்தகல்யாணகுணங்களைச் சாதித்தனரே, அது எப்படி இவருக்குத்தக்கதாகும்? உபநிஷத்பிரகரணத்தில் ஆசாரியவுபதேசத்தில் முக்கியமாய் அமையவேண்டியதமையுமா? அல்லது அசம்பத் தமங்களப் போலிகளெல்லாம் அங்கமையுமா? ஸ்ரீபிருகஜ்ஜாபாலம் அதுகொண்டேயல்லவோ "ஐ தவஸ ஹூதிஹ ூதி கஸி" ஆ ூக 'ஆகையாலன்றோ பூதியைப்பூதிகரி என்றது' என்றுபசங்கரித்தது இப்பொருளையன்றோ ஸ்ரீலோககுரு சுவாமிகள் கூறியது. இதைக் குற்றம்பிடித்தது அறிவின் குறைவோ, அல்லது எத்தீவினையோ? நிற்க. இங்கு உபதேசிக்கப்படுவது ஸமாவர்த்தனஞ் செய்துக்கொள்ளவிரும்பும் உபகுர்வாணப்ரம்மசாரிதர்மம் ஆதலால் 'ஐஹ்யெஸ த தஂவெஊா நஸஸா நவஈாயணஃ'। என்றும் பஸ்மஸ்நானபூர்வமாய் வேதாத்யயனம் செய்யவேண்டும் என்று உசனர்ஸ்மிருதியில் சொன்னபிரகாரம் பஸ்மமாத்திரம் பொருளேயன்றி அச்சொல்லுக்கு எச்சமயமும் இவர்சொல்லும் தாந்திரிகதீக்ஷையுடன்கூடிய பாசுபதவிரதம் பொருளாகாது. ஆதலாற்றான் சாம்பவமூர்த்தன்யரும் கற்பசூத்திரகாரசிகாமணியும் ஸ்ரீ ஹரதத்தாசாரியராதி பரமாசாரியர்கள் புகழப்பதம் பெற்றவருமான ஸ்ரீ போதாயனமாமுனிவர்.

ஐயாெதாஜிஜா தீநாஜொஹாஹவிவஂ ூ வியிஂ வ்யா வ்யாஸ்யாஃ। ஹூெதைநவ ூ கிதவ்யூதிஹ்யாஜா யஜெத॥

'இனியதனுல் துவிஜாதிகளுக்கு நாடோறும் திரிபுண்டரவிதியை விரிப்பாம். பூதியைத்தவறற்க என்றல்லவோ வேதங்கூறுகின்றது' என்று எடுத்துவிரித்த சூத்திரத்தால் விரஜாஹோமாதிகளைக் குறித்தாரேயன்றி வேறுவழி இவர் கூறும் தாந்திரிகதீக்ஷகளை அவர்சொல்லவில்லை. மேலும், போதாயனர் இதேவசனத்தை மூலமாகக்கொண்டு இந்த விரஜாஹோமபத்ததியைச் செய்தாராகையால் அதற்கு அது வேகன்மமாம். இது உபநிஷத்காண்டமாயினும் கிருஷ்ண யஜுர்வேதத்துள்ள ஆரண்யகத்தில் இவ்வுபநிடதம் மூன்று பிரச்னங்களும் படிக்கப்பட்டு ப்ரம்மமேதத்தில் விநியோகமும் பெற்றதாகையால் கற்பசூத்திரமும் இதற்கங்கமேயாம் என்க. ஆகவே ஸ்ரீஜாபாலவுபநிடத மகாபாரத சிவபுராண சூதசங்கிதா போதாயன சூத்திரங்களுக்கு ; விருத்தமாகவும் அபியுக்தாசாரங்களுக்கு ; விருத்தமாகவும் 'பூதி' என்னும் சொல்லுக்குப் பாசுபதவிரதம் எனப் பொருள் கொள்ளல் கூடாது. மேலும் ஒருசமயம் வைதிகபாசுபதத்தைக் குறித்தாலும் பொருந்துமேயன்றி இவர்கொண்டொழுகும் அவைதிக பாசுபதத்தைக்கொண்டு பொருட்படுத்தல் எஞ்ஞான்றுமமையாது. என்னையெனில் கூறுதும். இவ்வசனம் தைத்தரீய உபநிடதம் முதல் பிரபாடகம் 11-வது அனுவாகத்துள்ளது. அவ்வனுவாகமெல்லாம் வேதங்களைக் கற்பித்த பரமாசாரியன் சீடனுக்குபதேசிக்கும் எதிர்கால ஒழுக்கம். இதற்குமுன் 8-வது பிரணவமகிமை. 9-வது வேதாத்தியயனப்பெருமை. 10-ம் அதுவே. 11-ல் மட்டில் இடையே சைவதாந்திரிகதீக்ஷை பிரஸ்தாபம் எங்ஙனம் ஸம்பவிக்கும். மேலும் இதுமுதலில் ஒருமுறை உபதேசித்த விஷயத்துக்கே விரிவாய் மற்றொருமுறையனுவாதம். ஆகவே அதுடன் இதற்குப்பொருள் ஒத்திருக்கவேண்டும். அப்பூர்வோபதேசத்தில் 'ஸத்யஂவத' 'ய ஜஂவா' 'ஸ்வாய்யா நாவ ூஜஃ' "ஸத்யத்தைச்சொல்" 'தருமத்தைச்செய்' 'சுவாத்யாயத்தைவிடாதே' என்றவாக்கியமூன்றனுள்ள பொருளை விரிக்கவே மீண்டும் சிலவாக்கியங்கள் எழுந்தன. அவைகளில் முதல்வாக்கியம் 'ஸத்யா நூ ஜிதவ்யஂ' 'ஸத்தியத்தைத் தவருதே' என்றது. இது அந்த முதலுபதேசத்தின்பெயர்ப்பேயாம். அடுத்தது 'யஜ்ஜா நூ ஜிதவ்யஂ' 'தர்மத்தைத்தவருதே' என்றது. அதுவும் இரண்டாம் உபதேசத்தின் பெயர்ப்பேயாம். மேல் மூன்றுவாக்கியங்களுள. அவையாவன:—

'கு ஶலா நூ ஜிதவ்யஂ'
'ஹூதெ நூ ஜிதவ்யஂ'
'ஸ்வாய்யாயவ்ரவவநாஹ்யாஂ நவ ூ ஜிதவ்யஂ'

'குசலத்தைத்தவர்த்திடாதே'
'பூதியைத்தவர்த்திடாதே'
'சுவாத்யாயப்பிரவசனங்களைவிடாதே'

என்பன. இவைமூன்றும் முன்னெடுத்த மூன்றும்உபதேசத்தின் விரிவு. எதற்காக இவ்வளவெனில், சென்ற ஒன்பதாம் அனுவாகத்தில் வேதாத்யயனம் விரிக்கப்பட்டமையாலும் அத்யயனம் என்பது குரு 'உச்சரிக்கத்தாமும் உச்சரிப்பது மட்டில் போதாது; மற்று அடியில்வரும் நான்கு சோபானங்களையும் பெற்று அதுபயன்படவேண்டும். என்றும் கருதி மூன்றுவாக்கியங்களால் விரித்ததென்க. அந்நான்கு ஸோபானங்களாவன:—

'வு த ஹி ஶூவ ூ காெரவி ெஜ்யாவய ூ ஹவதி ஜூஜொகாெஜ நஸ்வாய்யாயகாெஜவ ூவவ நகாெஜ நவூ) வஹாரகாெஜ நவெதி' 'நான்கு வழிகளில் வித்யையுபயோகப்படும். ஓதல்=அப்பியசித்தல் (அதாவது அதில்கண்ட

படி யனுஷ்டித்தல்) ஓதுவித்தல்=விவகாரம் (அதாவது அனுஷ்டிப்பித்தல்) என' என்று ஸ்ரீபதஞ்சலிபகவான் வியாகரணமாபாஷ்யத்தில் வகுத்தருளியபடியாம். அவற்றுள் இறுதியிலுள்ள வாக்கியம் ஓதல் ஓதுவித்தல் இரண்டையும் சுவாத்யாயப் பிரவசனங்கள் என்றசொற்கள் விரித்தன. மற்று அனுஷ்டானம் அனுட்டிப்பித்தல் இரண்மே இங்கு சொல்லப்படவேண்டுவது. அவற்றில் குசலம் என்றதுஅனுட்டிப்பித்தலாகிய யோகக்ஷேமமாம். 'பூதி' என்பது பரிசேடகத்தால் அனுட்டானத்தின் மேனின்றது. எல்லாவைதிக கன்மங்களுக்கும் பஸ்மதாரணம் அங்கமாகவே, அதைமுதன்மை நோக்கிப் பூதியென்று குறித்தது. ஆயின் பூதியுடன் கூடியகர்மமெல்லாம் பூதிஎனப்பட்டதென்றதாயிற்று. ஆகவே பூதிஎன்ற மங்களக்குறியுடனிகழ்ந்தகருமமே இதன் பொருளெனக்கொண்டு வியாக்யானஞ்செய்து வேதாந்தத்துக்கும் பொருந்தியதென்க. முன்பின் பிரகாணங்களுக்குத்தக்கபடியே எதையும் பொருட்படுத்தவேண்டும் என்று வேதவழியறிந்த ஆன்றோர் சொல்லுவாராம். இங்கு உபக்கிரமம், வேதவிஷயம், உபசங்காரம் அப்படியே. அப்பியாசப் பிரமாணமும் உண்டு. ஆகவே, வைதிககன்மங்களை எல்லாம் குறிக்கும் வழியில் இப்பூதி யென்னும் சொல்லமைக்கப்பட்டமையின் அதன் செம்பொருளாய பஸ்மத்தை விடாத விலக்ஷணையாய் பொருட்படுத்தியது மிகவும் பொருந்தியதென்க. ஆதலாற்றான் ஸ்ரீநீலகண்டதீக்ஷிதர் அவர்களும்

நாஶ்வாஸ்யமங்கலஸஹிதாநாம் மங்கல்ய வேஷம்ஸி தே। நஶ்யந்த்யேவ யதாஸிதே தாநவைகம் காலேந ஹவ்யேர்ப்பிதி॥ நித்யே ஹி பூதிரேவ ஹர்ஷயந்திய ஸ்வாமங்கலமங்கலம்। ஸஸ்வாமீஶ தைவதம் நித்ய ரோநாநிரவிநாத்ராயதே॥

'மற்றைய மங்களங்களெல்லாம் நசிப்பதால் அமங்களங்களேயாக, நசிக்கும் தேவர் தரிக்கும் அமங்கள அலங்காரங்களால் பயனென்ன வென்று, நித்தியமாய் திருநீற்றையே தமது திருமேனியிலணியும் திங்களணிப்பெருமானே எமக்குக்குலதெய்வம், மற்றெவர்பெயரையும் எடோம்' என்றார் இவ்வளவுபந்நியாசங்களால் வேதநெறிக்கடைப்பிடித்தொழுகுவோர்க்கு அவசியம் ஸ்ரீலோக குருஸ்வாமிகள் செய்த வ்யாக்கியானம் குற்றமற்றது என்பது தெற்றெனவிளங்கும். மேலே இவர் மஞ்ஜுஷை விஷயத்தில் ஏதோ எழுதிய வாக்யார்த்தம் பிசகென எழுதியது பிரகிருத சம்பந்தமில்லாததாகவே அதைப்பற்றி யாதும் விசாரிக்கப் புகுந்தோமில்லை. மேல்முண்டகச் சுருதியைப்பற்றி விசாரிப்பாம். அதுவும் முன்னொருவாறு விசாரித்து இவர்சொல்லும் வழி குற்றமுள்ளதெனக்காட்டப்பட்டது. அதன் சொரூபத்தை இங்கும் சிறிது விரித்து சர்வசமரஸ சித்தாந்தம் சொல்லுவாம். முண்டகோபநிடதத்தின் இறுதியில்:—

க்ரியாவந்த: ஶ்ரோத்ரியா ப்ரஹ்மநிஷ்டா: ஸ்வயம் ஜுஹ்வத:। ஏகர்ஷிம் ஶ்ரத்தயந்த: தேஷாமேவைதாம் ப்ரஹ்மவித்யாம் வதேத ஶிரோவ்ரதம் விதிவத்யைஸ்து சீர்ணம்॥

'கிரியாவான்களும் சுரோத்திரியரும் ப்ரம்மநிஷ்டரும்தானே சிரத்தையுடன் ஏகாக்னிஹோத்திரம் செய்பவரும், விதிவழுவாது சிரோவிரதத்தையனுஷ்டித்தவரும் யாவரோ, அவருக்கே இந்தவேதவித்தையை யுபதேசிக்கவேண்டும்' என்று சொல்லப்படுகிறது. இதுவிஷயமான சூத்திரம் ஒன்றுவேதாந்த சூத்திரங்களில் மூன்றும் அத்தியர்யம் மூன்றும் பாதம் 1-ம் அதிகரணத்தில் இருக்கின்றது. ஸ்ரீகண்டபாஷ்யவிசாரத்தில் அந்தச் சூத்திரத்தையும் அதற்கு ஸ்ரீகண்டமுனிகள் செய்தஉரையையும்காட்டிஅதுமுற்றிலும்ஸ்ரீலோககுருபாஷ்யத்துடன் ஒத்திருப்பதை நிரூபித்தோம். அங்கே அதைக்கண்டடங்கி இவர் வீண்வாதம் பேசும் சுபாவத்தைப் பரிகரிப்பாம். ஸ்ரீபாஷ்யக்காரர் எவரும் சிரோவிரதம் என்பது எல்லோருக்கும் பொதுவான விரஜாவிரதமல்லவென்று ஓதுக்கினுரேயன்றி அது திருநீறுசம்பந்தமுள்ளவிரதமல்ல வென்றனரில்லே, ஸ்ரீலோககுருஸ்வாமிகள் அதன் சொரூபத்தை முண்டாகபாஷ்யத்தில்

'ஶிரோவ்ரதம் ஶிரஸ்யக்நிதாரணலக்ஷணம் யதாதர்வணாநாம் வேதவ்ரதம் ப்ரஸித்தம்' 'சிரோவிரதம் என்பது சிரசில் அக்கினியைத் தரிப்பதைக் குறியாயுடையவேதவிரதமென்று ஆதர்வணிகருள் பிரசித்தி' என்றனர். இதனுல் அதற்குவந்தகுறையாது? சிரோவிரதம் என்றபெயர் இரண்டிற்கும் பேயராக விருக்கலாம்; அதில் ஒன்றைப் பொருளாக்கினுல் மற்றதற்கு விரோதமென்ன? அந்தப்பிரகரணத்தில் ஸ்ரீகண்டபவதேவராதி இதரபாஷ்யகாரரும் கூட இது ஆதர்வணிகருக்கேயுள்ள வேதவிரதம் என்றனரே; அவர் சுத்தசாம்பவர் தானுமாயிற்றே; அவரிடம்போய் "ஓஸ்ரீகண்டமுனிவர்கோமான்! யான் எங்கும் தேடியலேந்தும் எனது ஆகமசைவத்துக்கு ஆதாரபாஷ்யமில்லே; எப்படியானுலும் எமக்கும் ஒருசிவோத்கர்ஷம் சொல்லும்; வேதாந்தபாஷ்யம் கிடைத்ததே என்று உம்மைக் குருசுவீகாரம்செய்துகொண்டு உமதுகாலில் சரணுகதிசெய்ய, நீர்எனது சித்தாந்தத்தை அவலமாக்குமாறு அந்தோ! சிரோவிரதத்தை யஞ்ஞ சம்பந்தமற்ற துரியமகாபிசாரசாகையாகிய அதர்வணவேதத்துக்கேயுரியது; அங்ஙனமே சமாசாரம் என்ற புஸ்தகம் பேசியது என்றீர்? அந்தச் சூத்திரத்துக்குப்பொருளுரைப்பது நியர்யமல்ல; மத்துவாசாரியர் உரைத்தது போல் வேறு எப்பாஷ்யகாரரும் ஒப்பாத ஒருபொருளேக் குறிக்காது என்னசங்கடம் செய்துவிட்டீர்; எங்கள்கதி என்ன" வென்றே கதரவேண்டும். இப்படிச் செய்யாததை யொழித்து ஓடிவந்து ஸ்ரீஜகத்குருநாதனேத் தூஷிப்பதில் பய

ன்யாது? ஏன் அவராவது இந்தசமாசார புஸ்தகக் கதைவிட்டு இது தாந்திரிகதீக்ஷையின் பெயரே எனலாகாது? இவர்போகட்டும், பவ்தேவராவது சொல்லக்கூடாதா? அதற்கு வியாக்யானத்திலாவது ஸ்ரீமத் தீக்ஷிதர் அவர்கள் சொன்னார்களா? இதனுல் அது பஸ்மதாரணம் அல்லவென்றேமா? மற்று அக்னிதாரணத்துடன் கூடியபஸ்மவிரதமே என்பது எமதுகருத்து. ஆனுல் அதுவும் வைதிகமேயன்றி அவைதிகாகமவிரதம் என்பது மன்று எனப் பலமுறைவற்புறுத்துவாம். அந்தசமாசாரக்கிரந்தத்துள்ளதே இதுஎன்று ஸ்ரீகண்டராதி எல்லோரும் ஒப்பினுராதலால் இதன்விதி அதர்வணர்க்கே என்று ஏற்பட்டது. அதில் அதிகாரிகளைக் குறிக்குமிடம் 'சுரோத்ரியர்' என்றும் ஏகாக்னிஹோமம் செய்பவரும் என்றும் இருவிசேடணங்களால் வைதிகராகியஇவருக்கேஇதுஉரியது என்றும் ஏகாக்கினி காண்டத்தில் இஃதுள்ளதாகையால் வேதங்கடோறும் ஏற்பட்டபேத விரதங்கள் எப்படி அவ்வவ்வேதங்களுக்கே யுரியனவோ அங்ஙனமிதுவுமாம் என்றும் ஏற்பட்டது. மேலும் ப்ரம்ம சூத்திரத்தில் இதற்குத் திருஷ்டாந்தமாகச் சொன்னது ஸவங்கள். அவை சௌரயாதிகள்என்றனர்.சார்வாசாரியர்களும்அந்தசௌர்யசவாதிசதௌதபரியந்தமான யாகங்கள் எப்படி ஏகாக்னியில் ஆதர்வணிகர்களுக்கே யுள்ளதோ அப்படியே இதுவும் ஏகதேசிகளுக்குள்ள விரதமேயாம். ஆதலாற்றான் ஸ்ரீகண்டமுனிகளும் பாசுபதவித்தையை நிரூபிக்குமிடம் இதைச் சேர்த்தாரில்லை. ஆனதுபற்றியே வேதமும் 'இக்தவேதவித்தையை' என்று சிரோவிரதமில்லாதார்க்கு உபதேசிக்கக் கூடாத சாகை முண்டகமேயெனக் குறிக்கப்பட்டது. ஆனுல் ஆசிரியர் அப்பயதீக்ஷிதராதியோர் இதனை ஸ்ரீ பஸ்மதாரணபரமாக புராணப்பிரமாணபூர்வம் பஸ்மவாதாவளியாதிகளில் உபதேசித்ததுதவறே வெனின், சிவ சிவ, ஒருபோதும் தவருகாது. மற்றதன்பொருத்தம் எங்ஙனம் எனில் கூறுதும். ஸ்ரீ காலாக்கினிருத்திரம் ஜாபாலி முதலிய உபநிடதங்களில் 'இது நான்குவேதங்களிலும் சொல்லப்பட்டது என்று நிரூபிக்கப்பட்டமையால் அதுவேதங்களின் வேற்றுமைபற்றி பெயரும் வேருகப்பெற்றது என்று காட்டினுர் என்க. பாருங்கள் இது ருக்வேதத்தில் கௌஷீதகிச்சுருதியில் ஸர்வவேதாதி சொரூபமாக உபாஸிக்கும்படி அனுவதிக்கப்பட்டது. அது அங்கார வித்தையாயது தைத்தரீயத்தில் பூதி எனப்பட்டது. அதனையே அச்சாகையின்சூத்திரகாரரான ஸ்ரீபோதாயனர் விரித்தார். ஆகவே பூதிசாஸனமெனப்பட்டது. சாமவேதத்தில் ஸந்யாஸ வாசுதேவஉபநிடதங்களில் உத்தூளனமே பரமஹம்ஸருக்கும் பிரதானமாகச் சொல்லப்பட்டு உத்தூளன வித்தையெனப்பட்டது. அதர்வணத்தில் அதர்வசிரஸில் பாசுபதவித்தை எனப்பட்டது. இவையெல்லாம் ஒருசாகையைக் குறித்ததன்ருகவின் எல்லாச்சாம்பவ ஸைத்தாந்திகரும் இப்பிரமாணங்களை எடுத்துக்காட்டினுர். சிலர்மட்டும் ஒருசாகையைச்சார்ந்ததை எடுப்பானேன் எனவிட்டார். ஆயின் மற்றையசாரார் அதையும் விடாது எல்லாவேதங்களிலும் இஃதுண்டெனக்காட்டி அனேகபிரமாணங்களைக் காட்டினுர். மேல் ஸ்ரீவைகானஸசாகையிலும் ஸ்ரீ பஸ்மதாரணம் சொல்லப்பட்டதே. அதை ஏன்மற்றவர் எடுக்கவில்லை என்று ஒருகுறை பிறரிடம் சொல்லலாமா? மேலும் தைத்தரீய சாகையில் மகாக்னிசயனஞ்செய்து ஸ்ரீபரமேசுவரனுக்கு வஸோர்த்தாரைசெய்யும் சிவபுண்ணியச்செல்வருக்கு ஒரு அக்னிதாரணவிரதம் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது ஒருவருடகாலம் ஒரு சிறுகுடத்தில் அக்னியைவைத்து அதைக்கண்டத்தில் கட்டித்தரிப்பது. அதில் நாடோறும் எடுக்கும் பஸ்மத்தின் சொருபத்தைச் சாக்ஷாத் அக்னி ரூபமென்றும் நிரூபித்திருக்கின்றது. அனேகவிடங்களில் பஸ்மத்தாலேயே சுத்திகள்சொல்லப்பட்டது. அவைகள் ஒவ்வொருசாகையிலும் ஒவ்வொருசுன்மத்திலும் குறிக்கப்பட்டமைகொண்டு தள்ளிவிட்டார்கள் ஆன்றேர். 'சிரோவிரதம்' என்றசொல்லுக்கு—சிரஸில்=அதர்வசிரஸில் சொல்லப்பட்டவிரதம் சிரோவிரதமெனப் பொருள்கொண்டால் அதுவே இந்புராணவாக்கியங்களுக்கும் பொருந்துமே. அதுமட்டோ! ஸ்ரீகண்டமுனிவர்கள் அதர்வசிரசில் சொல்லப்பட்ட ஸ்ரீமத் ஸர்வாத்மகருத்திரோபாஸ்திக்கே பாசுபதவித்தை எனப்பெயர் கொடுத்தும் பஸ்மதாரணத்தையும் பாசுபத விரதமெனப் பெயர்கொடுத்தும் வழங்கிய நேர்மையை முன்னரே ஸ்ரீகண்டபாஷ்யவிசாரப் பிரகரணத்தில்காட்டினேமே. அங்குள்ள இரண்டு பாசுபதங்களும் இரண்டுமுறை யெடுக்கப்பட்ட (ஞு தமெ௦த ஆ௱ஶ௱வ தம்) 'இது பாசுபதவிரதம்' என்று சொல்லப்பட்டமையால் ஒன்றை முன்வாக்கியங்களுடனும் மற்றதைப் பின்வாக்கியங்களுடனும் சேர்த்துப்பொருள்பட விசைத்தனர். இதனுல் ஒருகுறையுண்டா? பாசுபதம் என்ற சொல்லுக்குத் தாந்திரிகதீக்ஷையே பொருள் என்னுது தோன்றியபடி ருத்திரத்யானமாம். அதிலும் ஸர்வோபாதானருத்திரத்தியானமாம் பாசுபதம் என்றுர் என்று ஸ்ரீகண்டமூர்த்திகளிடம் குறைகூறுதல் நியாயமாமோ? ஆகையால் ஆதர்வணிகருக்கேயுள்ளதும் அவைதிக சம்பந்தமற்றதுமான பஸ்மதாரண சிரோவிரதத்துக்கும், அதர்வசிரஸில் உள்ளபாசுபதத்துக்கும் ஸர்வோபாதானருத்ரத்யானங் கூடப் பொருளாவதுபோல அக்னிதாரண விரதமும் பொருளாகவேண்மொகையால் அதை ஸ்ரீமதாசாரிய சுவாமிகள் அங்ஙனமுறைத்தார்கள் என்பதுண்மை. இதுவுமன்றி அதர்வணபேதத்துள்ள உபநிடதங்களுக்கெல்லாம் வியாக்கியானம்செய்த நாராயணபட்டரும் இவ்விதமே அர்த்தஞ்செய்தார். ஆகவேஸ்ரீலோக குருஸ்வாமிகள் மட்டும் சிரோவிரதச்சொல்லுக்கு வேறுபொருள் செய்ததாக இவர் மயங்கியது பயனற்றதாயிற்றென்க.

இன்னும் வரும்.